


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகரூப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,மாவட்ட , இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் எஸ்.மாரியப்பன் கென்னடி , மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ். ஏ. வல்லபாய் , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உள்ளார்கள்.



மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் 5 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு எழுத்தாளர் அன்னக்கொடி எழுதிய ”கரும்புகை ”கூத்தின் சுவாசம் ”கைநாட்டுக்காரன் ஆகிய மூன்று நூல்கள் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவுனர்/மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் ம. சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

### நவ. 27 துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளன்று – சிவகங்கை மாவட்ட

# அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மாவட்டக் கழகம் சார்பில் அணிவிக்கப்படுமென அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, நவ. 26 -*

சிவகங்கை மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் திருப்பத்தூர் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது .மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்றுப்பேசினார் இந்த கூட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் குழு இணை செயலாளர் எஸ். மாரியப்பன் கென்னடி , மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.

எஸ் .ஏ.வல்லபாய் ஆகியோர் வாழ்த்தி பேசினார். இதில் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது . திராவிட இயக்கத்தை உருவாக்கிய தலைவரின் பிறந்தநாள் குடும்ப விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது. பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ,தளபதி ஆகியோரின் பிறந்த நாள் அவர்கள் வழிகாட்டுதலின்படி மக்கள் நலத்திட்ட விழாவாக விழாக்கள் நடைபெற்று வருகின்றது .இதை முன்னிட்டு நலிவுற்றவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது 27ஆம் தேதி துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட உள்ளது.

துணைமுதல் வராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் அல்லும் பகலும் அயராது கழகத்தின் வளர்ச்சிக்காகவும் கழகத் தலைவர் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக் கும் வகையில் அயராது இரவு பகல் பணியாற்றி வருகிறார் .அவரது பிறந்த நாள் என்பது மக்களின் விழாவாக கொண்டாடப்பட வேண்டும் .இளைஞர் அணியினர் கழக வரலாறுகளைஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்தல்,

கழகக்கொடியேற்றி இனிப்புகள் வழங்குதல்,சமுதாயத் தில் அடித்தட்ட மக்களுக்கு உதவிகள் ,முதியோர் இல்லங்களில் உணவு வழங்குதல்,இனிப்புகள் நோட்டு புத்தகங்களை பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள், கோலப் போட்டிகள் மற்றும் பல்வேறு விழாக்களை நடத்த வேண்டும். குறைந்தது ஒரு மாதமாவது இளைஞர் அணியினர் இதை நடத்திட வேண்டும் .

சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் 27ஆம் தேதி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் பிறக்கும் ஆண் பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் . துணை முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இன்றி இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் அவரது பணி அமைய வேண்டும் என்று பிறந்த நாளில் வாழ்த்துகிறேன் இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசினார்.. திருப்பத்தூர் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் பஷிர் நன்றி கூறினார் . இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா, கே எம்.பொற்கோ, கார்த்தி , மதிவாணன், மகாதீர் பரணிகிட்டு ,மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் அயலக அணி சன்சீமான் சுப்பையா ,மாணவரணி முகமது கனி,மற்றும் ஒன்றிய ,பேரூர், அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# மாபெரும் பெண்கள் மின்னொளி கபாடி திருவிழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் போட்டியை தொடங்கி வைக்கின்றனர்!

*புதுக்கோட்டை, நவ.26 -*

புதுக்கோட்டை 41வது வட்ட கழக தி.மு.க. சார்பில் துணை முதல்வர், இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பெண்கள் மின்னொளி கபாடி திருவிழா 27,28.11.2025, தேதிகளில் மாலை 6.00 மணியளவில் குறிஞ்சிநகர் சேங்கைத்தோப்பு மைதானம், மருப்பினி ரோடு, புதுக்கோட்டையில் நடைபெறுகிறது. 41வது வட்ட பிரதிநிதி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பொன்நகர். இரா.செந்தில்குமார் வரவேற்புரையாற்றுகிறார். புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், கணிம வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கபாடி போட்டியை தொடங்கி வைக்கின்றனர்.

மாநில அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், மாநகர பொறுப்பாளர்கள் துணை மேயர் எம்.லியாகத்அலி, வே. ராஜேஷ், மாநில. மாவட்ட நிர்வாகிகள் அஞ்சுகா மீனாட்சிசுந்தரம்,

த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, பி.டி. அரசக்குமார், அரு.வீரமணி, சுப.சரவணன், க.மதியழகன், வி.என்.மணி, எஸ். எஸ்.கருப்பையா, டாக்டர் எஸ். ஆர். அண்ணாமலை, எம். எஸ். அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பெ.ராஜேஸ்வரி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், முனைவர் சி.குறிஞ்சி வாணன்,

பூங்குடி எம்.சிவக்குமார், செ.கணேஷ், எஸ்.முத்துக் கருப்பன், கார்த்திகேயன் வேல்சாமி, தென்னக்குடி ராஜா, மாநகர நிர்வாகிகள் அ.ரெத்தினம், ப.ரெங்க ராஜன், மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், ஏ.ராமலிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜ துரை, மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசு 1,00,001,

இரண்டாம் பரிசு.70,001, மூன்றாம் பரிசு 40,001, நான்காம் பரிசு 40,001 வழங்கப்படுகிறது. அனைத்து பரிசுகளுக்கும் கோப்பை வழங்கப்படும். கால் இறுதி சுற்றில் வெளியேறும் அணிக்கு ரூ.5001 ஊக்கத்தொகை வழங்கப்படும். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே. எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.க. இராமகிருஷ்ணன், என். சேட்டு, எம்.பரமசிவம், தவ.பாஞ்சாலன், மு.பி.ம. சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, வெ.முத்து கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ.இளங்குமரன், சி. சண்முகம் கே.பி.அய்யப்பன், ஆர்.சாமிநாதன், கோவிந்தராஜன், பொதுக் குழு உறுப்பினர்கள் என். சாத்தையா, இராசு. சந்தோஷ், ராப்பூசல் எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, பேரூர் கழக செயலாளர்கள். வை.விஜயக்குமார், உ.முருகேசன், ப.அண்ணாதுரை, எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, கழக முன்னோடிகள் மு.பி.மணி, வை.கோ. ராஜன், இராய.முத்துக்குமார், மு.கலியமூர்த்தி, வழக்கறிஞர் திருஞானசம்பந்தம், க.நைனா முகம்மது, எம். எம்.பாலு, ஆர்.பாலகிருஷ்ணன், கறம்பக்குடி ஜெகநாதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநில அமெச்சூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் 41வது வட்ட கழக பிரதிநிதி ஜி.ரெங்கம்மாள் நன்றி கூறுகிறார்.

### தருமபுரி கிழக்கு மாவட்டத்தில்

# கருப்பு சிவப்பு வெற்றி பெற களப்பணியில் இறங்கிடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. பேச்சு!

தருமபுரி, நவ. 26–

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலக தளபதி அரங்கத்தில் வருகின்ற நவ 27 ஆம் தேதி இளைஞர் எழுச்சி நாள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணியினருடன் ஆலோசனை கூட்டம் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஆ.மணி எம். பி. பேசியபோது:

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர் அணியின் சார்பில் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகள் தோறும் எளியோர் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் கழக கொடி ஏற்றுதல்,பள்ளி கல்வி உபகரணங்கள் வழங்குதல்,விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட ஆக்க பணிகளை மேற்கொள்ள வேண்டும், இளைஞர் எழுச்சி நாளான நவ 27 முதல் நாம் வரவிருக்கும் 2026 தேர்தலுக்கு நம்மை தயார்படுத்தி கொள்ள வேண்டும்,ஒவ்வொருவரும் ஓய்வின்றி உழைத்திட வேண்டும்,கழக ஆக்க பணிகளுக்காக இளைஞர் அணியினருக்கான அனைத்து உதவிகளையும் நான் செய்ய தயாராக உள்ளேன்.வரவிருக்கும் தேர்தலில் தருமபுரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளிலும் நாம் வென்று அந்த வெற்றியினை கழகதலைவர் முதல மைச்சர் மற்றும் துணை முதலமைச்சர்,



மாநில இளைஞர் அணி செயலாளர் நமது சின்னவர் ஆகியோரிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்,7 ஆவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டும்,என் உடல்நலத்தை பற்றி நான் கவலைப்படவில்லை,என் உயிர் முக்கியம் இல்லை கருப்பு சிவப்பு வெல்ல வேண்டும் என்பது மட்டும் தான் எனக்கு முக்கியம்,எனவே கழகபணிக்கு எந்த நேரத்திலும் என்னை நீங்கள் அழைக்கலாம் இளைஞர் அணியினருடன் இணைந்து உழைக்க நான் தயாராக இருக்கிறேன் என்று அவர் பேசினார்.கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,துணை அமைப்பாளர்கள் சோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ்,ராஜகோபால்,கோடீஸ்வரன்,முத்தமிழன்,கலைசெல்வன்,தங்கதமிழ்செல்வன்,மற்றும் ஒன்றிய இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

### நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாள் விழாவை முன்னிட்டு

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் – உணவு வழங்கல்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

*கடலூர், நவ. 25*

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற (27.11.2025 வியாழக்கிழமை) அன்று இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில்



உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், அன்னதானம், பள்ளி மாணவர்களுக்கு நோட், பேனா, பென்சில் மற்றும் பொதுமக்க்களுக்கு நலத் திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் , தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டுக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகராட்சி பாகம் எண் 96, 105 , சஞ்சீவி ராயப்பேட்டை, நேரு வீதி, பூந்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம்பதிவேற்றம் பணியினை மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகரஅவைத்தலைவர் ரவிச்சந்திரன்,முன்னாள் நகர செயலாளர் கபிலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபு, திண்டிவனம் நகர மற்றும் உறுப்பினர்கள் ஷபியுல்லா, தில்ஷாத் பேகம் அக்பர்,மாவட்ட வர்தகர் அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

# நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

*நாகர்கோவில், நவ. 26 -*

நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து 25.11.2025, செவ்வாய்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து அதன்மேல் நடைபாதை அமைக்கும் பணிகள் மற்றும் ஒவ்வொரு வார்டுகளிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாகவும், மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையான நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மாநகராட்சி சார்பில் தெங்கம்புதூர் பகுதியில் அமைந்துள்ள கால்நடை கருத்தடை மையத்தில் கால்நடை மருத்துவர் மூலம் கருத்தடை செய்யப்பட்டு அதற்கு உணவு அளித்து பராமரித்து மீண்டும் அதே இடத்தில் கொண்டு விடுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநகராட்சி பொறியாளர் சரவணன், உதவி நகர திட்டமிடுநர் கெபின் ஜாய், மாவட்ட சுகாதார இணை இயக்குநர் அரவிந்த் ஜோதி, உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



கிறிஸ்துவ வன்னிய சமுதாய மக்களை எம்.பி.சி. பட்டியலில் சேர்ப்பதற்கு திமுக என்றும் உறுதுணையாக இருக்கும் என்று கிறிஸ்துவ வன்னியர் சங்க திறப்பு விழாவில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் சிறப்புரையாற்றினார்.